**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**இளங்கலை சட்டமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு திட்டம் இறுதிப் பரீட்சை – 2022/23**

**LLU3604 – அரசியலமைப்புச் சட்டம்**

**காலம் - மூன்று(03) மணித்தியாலங்கள்**

திகதி: 03.03.2024 | நேரம் : பி.ப.01.30 – பி.ப 04..30

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை 08**

**ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

**தெளிவற்ற கையெழுத்துக்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. "அரசியலமைப்புவாதம் என்பது, அடிப்படைச் சட்டத்திலிருந்து பெறப்படுகின்ற அரசாங்கத்தின் அதிகாரம் எனும் கோட்பாட்டை விரிவுபடுத்தும் கருத்துக்கள், அணுகுமுறைகள் மற்றும் நடத்தை வடிவங்களின் ஒரு தொகுப்பைக் குறிப்பிடுகின்றது."

    Done.E.Fehrenbacker, *Constitutions and Constitutionalism in the Slaveholding South* (University of Georgia Press, 1989) 1.

    மேற்தரப்பட்ட கூற்றின் பிண்ணனியில் அரசியலமைப்புவாதத்தின் முக்கிய பெறுமானங்கள் மற்றும் முக்கிய கோட்பாடுகளையும் விளக்குக.

    (20 புள்ளிகள்)

02. 'அதிகாரப் பகிர்வின் கண்டிப்பான பொருள்கோடலிற்கு அமைவாக, மூன்று கிளைகளில் எதுவும் மற்றொன்றின் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது, அல்லது எந்தவொரு நபரும் எந்தவொரு இரண்டு கிளைகளிலும் ஒரு உறுப்பினராக இருக்கக் கூடாது, அதற்கு பதிலாக, தனி நிறுவனங்களின் சுயாதீனமான நடவடிக்கையானது அவற்றுக்கிடையே சமநிலை மற்றும் தலையீட்டு முறைமையை உருவாக்க வேண்டும்.'

Benwell R and Gay. *O The Separation of Powers* (Standard Note: SN/PC/06053 Last updated: 15 August, Parliament and Constitution Centre) 2.

மேற்தரப்பட்ட கூற்றை இலங்கை, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றிலிருந்து உதாரணங்கள் எடுப்பதனூடாக மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

03. நியுஸ்டடாம் ஆனது தெற்காசியாவின் ஒரு ஜனநாயக மற்றும் இருமைத்துவ அரசாகும். நியுஸ்டடாமின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிகழ்நிலை அவதூறினை தடுப்பதற்கான ஒரு புதிய நியதிச்சட்டத்தினை இயற்ற கருதியிருந்தனர். எனினும், நிகழ்நிலை அவதூறினைத் (online defamation) தடுப்பதற்கான சட்டமூலத்தின் பல பிரிவுகளானவை நியுஸ்டடாம் அரசியலமைப்புடன் முரண்படுகின்றன. மேலும், சட்டமூலத்தின் பிரிவு 2 மற்றும் 4 ஆனவை நியுஸ்டடாம் ஏற்று அங்கீகரித்த சர்வதேச பொருத்தனையின் பிரிவுகளுடன் முரண்படுகின்றன. 'பிரஜையின் அதிகாரம்' என அழைக்கப்படும் ஒரு சிவில் சமூக நிறுவனமானது நிகழ்நிலை அவதூறினைத் தடுப்பதற்கான சட்டமூலத்தின் அரசியலமைப்புசார் தன்மையினை சவாலுக்குட்படுத்தி நியுஸ்டடாம் உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றினை தாக்கல் செய்தது. இதேசமயம் நியுஸ்டடாமின் வெளிவிவகார அமைச்சர் பாலா, செய்தியாளர்களை அழைத்து எந்தவொரு சட்டத்தையும் இயற்றுவதற்கு வரம்பற்ற மற்றும் தடையற்ற அதிகாரம் பாராளுமன்றிற்கு உண்டு என்று குறிப்பிட்டார்.

நீர் பிரஜையின் அதிகாரம் எனும் நிறுவனத்தின் ஒரு உறுப்பினர் எனக் கருதுக.

மேற்தரப்பட்ட கூற்றின் மீது நியுஸ்டடாமின் அரசியலமைப்பானது 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பை ஒத்தது எனக் கருதி, குறிப்பாக பாராளுமன்றத்தின் மீயுயர் தன்மை தொடர்பான கருத்துக்கு அமைவாக அறிக்கை ஒன்றினை தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

04. 'எனவே, நீதித்துறையின் சுதந்திரம் என்ற கருத்தானது ஏனைய இரண்டு அரசாங்க கிளைகளின் முறையற்ற செல்வாக்கிலிருந்து நீதித்துறையின் கூட்டு சுதந்திரத்தினையும், நீதிபதிகள் தங்களது நீதிமன்றக் கடமைகளை சுமந்து செல்வதில், தனிப்பட்ட சுதந்திரம் இருப்பதையும் குறிக்கிறது.'

Shetreet S. *Judicial Independence: New Conceptual Dimensions and Contemporary Challenges, In Judicial Independence: The Contemporary Debate* 594 (Shimon Shetreet & Jules Deschanes eds, 1985).

மேற்தரப்பட்ட கூற்றினை 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்புக்கு அமைவாக விமர்சன ரீதியாக ஆராய்க.

அரசியலமைப்பு உறுப்புரைகள், தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் சமகால உதாரணங்கள் கொண்டு உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

05. சீலண்ட் ஜனநாயக சோசலிசக் குடியரசின் நற்பெயர் பெற்ற இளம் பத்திரிகையாளரான மைகல் டொனால்ட் என்ற அரசியல்வாதிக்கும், ஹரி என்று அழைக்கப்பட்ட மற்றொரு நபருக்கும் இடையில் இடம்பெற்ற ஓர் சம்பவத்தைப் பற்றி புகாரளிக்க போகின்றார். குறித்த புகாருக்கு அமைவாக, தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையின் மீது பழிதீர்ப்பதற்காக ஹரியினை துப்பாக்கியால் சுட்டார். மைக்கல் இச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்ய சென்றபோது, மைக்கல் அவரது கூட்டு வண்டியிலிருந்து பலவந்தமாக இழுக்கப்பட்டதோடு, அவரது முடி முரட்டுத் தனமாக பிடிக்கப்பட்டு, கையாளப்பட்டதுடன் எந்தவிதமான காரணங்களும் விளக்கப்படாமல், இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களினால் அவர் கைது செய்யப்பட்டார். மேலதிகமாக, டொனால்ட் ஹரியினை சுட்டமைக்காக இன்னும் கைது செய்யப்படவில்லை எனினும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சம்பவத்தினை விசாரணை செய்யவும் கூட தவறியிருந்தனர். பொலிஸ் உத்தியோகத்தர்கள், டொனால்ட் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் அவர் அதே முறையில் கைது செய்யப்பட முடியாது எனக் கூறினர்.

மேற்தரப்பட்ட நிகழ்வினை சட்ட ஆட்சி என்ற கருத்தின் பிண்ணனியில் பரிசீலிக்குக.

சீலண்ட் நாட்டினுடைய அரசியலமைப்பானது இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பை ஒத்தது எனக் கருதுக. பொருத்தமான அரசியலமைப்பு உறுப்புரைகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழககுகள் கொண்டு உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

வினா 6 (அ) அல்லது 6 (ஆ) இல் ஒன்றுக்கு மாத்திரம் விடையளிக்குக.

**ஏதாவது ஒன்றுக்கு**

06. (அ). 'ஒரு வேட்பாளரிற்கும் மற்றையவரிற்கும் இடையே மௌனத்தாலும், இரகசியமான வெளிப்படுத்தலாலும் பிரஜை ஒருவரது தெரிவினை வாக்களிப்பதானது, ஒரு பொது வெளியில் ஆற்றப்படும் சிறந்த பேச்சினை விடக் குறைவான பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தினை தெரிவிக்கும் சுதந்திரம் ஆகும்.'

*Krunathilaka and Another v. Dayananda Dissanayake, Commissioner of Elections and Others* (1999) 1 SriLR 157.

மேற்தரப்பட்ட கூற்றுக்கு அமைவாக, இலங்கையின் தேர்தல் முறைமையுடன் தொடர்புபட்ட சட்டப் பிரிவுகள் மற்றும் முக்கிய கோட்பாடுகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

**அல்லது**

(ஆ). 'அரசியலமைப்பின் வாசகத்திலிருந்து பொருளைப் பெறும் போது உயர் நீதிமன்றம் ஆனது அரசியலமைப்பிற்குள் உறுப்புரை ஒன்றின் குறித்த பொருளை இனங்காணும் வழிகளானது பொருள்கோடலின் சில முறைகள் அல்லது விதங்கள் என்பவற்றில் தங்கியுள்ளது.'

Brandon J. Murill, *Modes of Constitutional Interpretation* (March 152018 Congressional Research Service).

அரசியலமைப்பு உறுப்புரைகள் பொருள்கோடலில் நீதிபதிகளினால் பயன்படுத்தப்பட்ட வேறுபட்ட முறைகளை விமர்சன ரீதியாக ஆராய்க.

பொருத்தமான உதாரணங்களுடன் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

07. தென் ஆசியாவின் நிவ்லண்ட் தீவின் ஜனநாயக அரசின் புதிய நிறைவேற்று ஜனாதிபதியாக திரு. தொம்சன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். 2023 இன் மார்ச் மாதத்தின் சர்வதேச பெண்கள் தினத்தன்று, 2018 இல் நிவ்லண்டின் உயர் நீதிமன்றத்தால் ஒரு குடும்பத்தின் மூன்று உறுப்பினர்களைக் கொலை செய்தமைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஆன் என்பவரிற்கு சிறப்பான ஒரு ஜனாதிபதி மன்னிப்பு அளிக்க தீர்மானித்துள்ளதாக அறிவித்தார். ஆனிற்கு சிறப்பு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டமை ஆனது ஜனாதிபதி தொம்சனின் பாரபட்சமானதும், எதேட்சையானதும், சட்ட முரணானதுமான ஒன்று என பலரது விமர்சனங்கள் எழுந்தன. நிவ்லண்டின் ஜனாதிபதி செயலாளரிற்கு அமைய, சிறைத் திணைக்களம் மற்றும் பிற சில நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை கருத்திற் கொண்டு மன்னிப்பு வழங்கப்பட்டது.

நிவ்லண்டினுடைய அரசியலமைப்பானது இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பை ஒத்தது எனக் கருதுக.

இச் சூழ்நிலையினை பொருத்தமான அரசியலமைப்பு உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்தினை குறிப்பிடுவதன் மூலம் மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

08. பின்வரும் ஏதாவது **இரண்டின்(02)** மீது குறிப்புகளை வரைக.

(அ). அரசியலமைப்பின் வகுப்பாக்கங்கங்கள்

(ஆ). பாராளுமன்ற வரப்பிரசாதங்கள்

(இ). இலங்கையின் அடிப்படை உரிமைகள்

(ஈ). இலங்கையின் 1947 ஆம் ஆண்டைய அரசியலமைப்பின் முக்கிய அம்சங்கள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

*-பதிப்புரிமை பெற்றது-*